
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1017

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

தமிழ்.கா.அமுதரசன்

30

# வக்பு சட்டத் திருத்தம் : காக்கும் நம் தலைவர் கரங்கள்!




கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

*2025 ஏப்ரல் மாதம் 03-ஆம் தேதி தமிழ்நாடு சட்டமன்றம், இந்திய அளவில் ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து மிக தீவிரமான விவாதம் செய்து, நம் ஜனநாயக விழுமியங்களைக் காக்கும் கடமையை நிறைவேற்றியது. முன்னதாக அந்தப் பிரச்சினை குறித்து, எச்சரிக்கை செய்து சட்டமன்றத்தில் தீர்மானமும் நிறைவேற்றி இருந்தது. அந்தப் பிரச்சினை வக்பு சட்டத் திருத்த மசோதா.*

*கடும் எதிர்ப்புகளுக்கு இடையில், ஒன்றிய பா.ஜ.க. அரசு அந்த மசோதவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய அன்றுதான், அந்த மசோதாவுக்கு எதிராக மாநில சட்டமன்றத்திலும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், காரசார விவாதங்களுக்கு பதில் அளிக்கு விதமாக உரையாற்றினார்.*

*“27-03-2025 அன்று இந்த மாமன்றத்தில் ஒரு தீர்மானத்தை நாம் நிறைவேற்றினோம். இந்தியத் திருநாட்டின் மத நல்லிணக்கத்திற்கும் சிறுபான்மையின இஸ்லாமிய சமுதாய மக்களுக்கும் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும் வகையில், 1995-ஆம் ஆண்டின் வக்பு சட்டத்தினைத் திருத்துவதற்கு மக்களவையில் அறிமுகம் செய்துள்ள வக்பு சட்டத் திருத்த முன்வரைவினை முழுமையாகத் திரும்பப் பெற வேண்டும்” என்றது அவர் கொண்டு வந்த தீர்மானம். பா.ஜ.க. நீங்கலாக அனைத்துக் கட்சிகளாலும் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது.*

### அரசமைப்பின் மீதான தாக்குதல்

*“கடுமையான எதிர்ப்புகளையும் மீறி, வக்பு சட்ட மசோதா மக்களவையில் 232 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்துள்ளார்கள். ஆதரவாக, 288 உறுப்பினர்கள் வாக்களித்துள்ளார்கள் இந்தச் சட்டத் திருத்த மசோதாவானது நிறைவேற்றப்பட்டு இருந்தாலும், எதிர்த்து வாக்களித்தவர்களின் எண்ணிக்கை 232 என்பது சாதாரணமான எண்ணிக்கை அல்ல, எண்ணிக்கை கூடுதலாகக் கிடைத்து இருக்கலாம். ஆனால், இந்தச் சட்டத் திருத்தம் எதிர்க்கப்பட வேண்டியது மட்டுமல்ல; முழுமையாகத் திரும்பப் பெற வேண்டியது என்பதுதான் நம் கருத்து. அதைத்தான் நாம் இங்கே தீர்மானமாக நிறைவேற்றி அனுப்பியிருந்தோம்.*

*இந்தியாவில் இருக்கும் பெரும்பான்மைக் கட்சிகளின் எதிர்ப்பையும் மீறி, ஒரு சில கூட்டணிக் கட்சிகளின் தயவால் அதிகாலை 2 மணியளவில் இத்தகைய சட்டத்தை நிறைவேற்றி இருப்பது, இந்திய அரசியல் சட்ட கட்டமைப்பின் மீது செய்யப்பட்ட தாக்குதல்; மதநல்லிணக்கத்தைக் குலைக்கும் செயல். இதனை உணர்த்தும் வகையில், கருப்புச் சின்னத்தை அணிந்து, இன்றைய பேரவை நடவடிக்கைகளில் நாங்கள் பங்கெடுக்கிறோம்.*

> இந்த சட்டத்திருத்த முன்வரைவு நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்தே, தி.மு.க. இதனைத் தொடர்ச்சியாக எதிர்த்து வந்துள்ளது.

*நிறைவேற்றப்பட்டது இந்திய அரசமைப்பின் மீதான ஒன்றிய அரசின் தாக்குதல். இதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தி.மு.க. வழக்கு தொடரும்” என்று அறிவித்தார் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். ஒன்றிய அரசுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், நம் முதல்வர் அவர்கள், தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கருப்பு பேட்ஜ் அணிந்து, சட்டப்பேரவைக்கு வந்திருந்தனர்.*

*இந்தியாவில் இருக்கும் பெரும்பாலான அரசியல் கட்சிகளால் இந்த வக்பு சட்டத் திருத்தம் எதிர்க்கப்பட்டது. இவை அனைத்தையும் மீறி, நாடாளுமன்ற மக்களவையில் வக்பு சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்டிருப்பது மிகுந்த கண்டனத்துக்குரியது. வக்பு சட்டத் திருத்த மசோதாவுக்கு எதிராக, வக்பு வாரியத்தின் தன்னாட்சியை அழித்து, சிறுபான்மை இசுலாமிய மக்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் ஒன்றிய அரசின் சட்டத்துக்கு எதிராக தமிழ்நாடு போராடும்! போராடும்! போராடும்! அதில் வெற்றியும் பெறும்.*

*சர்ச்சைக்குரிய இந்தச் சட்டத்திருத்தத்துக்கு எதிராக, உச்ச நீதிமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில், வழக்கு தாக்கல் செய்யப்படும் என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்” எனவும் அறிவித்தார்.*

*இதையடுத்து தி.மு.க., காங்கிரஸ், ஆகியவை உட்பட உச்ச நீதிமன்றத்தில் மொத்தம் 140 வழக்குகள் தொடரப்பட்டன. ‘அரசியலமைப்புச் சட்டத்தின் மீதான தாக்குதலை சட்டபூர்வமாகவே தடுப்போம்’ என மாமன்றத்தில் பேசியதற்கு இணங்க வழக்கினைத் தொடுத்தது கழகம்.*

### வழக்கில் இடைக்கால வெற்றி

*தி.மு.க., காங்கிரஸ் உட்பட அனைத்து எதிர்க் கட்சிகளுமாகச் சேர்ந்து வழக்கு தொடுத்தன. மொத்தம் 140 வழக்குகள் தொடரப்பட்டன. குறிப்பாக, உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் முன் இந்த வழக்குகள் விசாரணைக்கு வந்தன.*

*தி.மு.க. முன்வைத்த வாதங்கள், இஸ்லாமிய சட்ட விதிகள், மற்றும் அரசியலமைப்பு ஆகியவைக்கு எதிராக இருக்கும் வக்பு திருத்த சட்டத்தை முழுமையாக ரத்து செய்து, அதற்கு தடை விதிக்க வேண்டும் என்று திட்டவட்டமாக பல கருத்துகளை எடுத்து வைத்தது கழகம். இந்த நிலையில், வக்பு திருத்த சட்டம் தொடர்பான வழக்கு, உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.*

*வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், வக்பு திருத்த சட்டத்திற்கு இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டது. வழக்கினைத் திரும்ப விசாரித்த நீதிபதி கவாய், இடைக்கால தீர்ப்பாக ஒன்றிய அரசு நிறைவேற்றிய வக்ஃபு சட்டத்திருத்த மசோதாவின் பல்வேறு அம்சங்களுக்குத் தடை விதித்தார்.*

### தொடக்கத்தில் இருந்தே எதிர்ப்பு

*இந்த சட்டத்திருத்த முன்வரைவு நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்தே, தி.மு.க. இதனைத் தொடர்ச்சியாக எதிர்த்து வந்துள்ளது. இதனை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ள பலரோடு சேர்ந்து வெற்றியும் கண்டுள்ளது. தி.மு.க. தலைமையிலான தமிழ்நாடு அரசும் ஒன்றிய அரசு வக்பு திருத்த சட்டத்தைத் திரும்பப் பெறவேண்டும் என வலியுறுத்திச் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி, ஆட்சி அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தும் பா.ஜ.க.வின் முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்தது.*

*ஒட்டுமொத்தமாக, இந்த சட்டத் திருத்தங்கள் செல்லாது என்று உச்சநீதிமன்றம் சொல்லவில்லை என்றாலும், ஒன்றிய பா.ஜ.க. அரசின் உள்நோக்கமான திருத்தங்களுக்குத் தடை விதித்து விட்டது உச்சநீதிமன்றம். பா.ஜ.க. அரசின் உள்நோக்கங்களை உச்சநீதிமன்றம் உணர்ந்து தடை விதித்துவிட்டது. ஆனால், அதற்கு பின்னும் அச்ச உணர்வு இருக்கிறது. அதேநேரத்தில், அதற்கு முன் நடந்த போராட்டங்கள் ஏராளமாக உள்ளன.*

...தொடரும்

## வரவேற்பைப் பெற்ற முற்போக்கு புத்தகக்காட்சி!

கழக இளைஞர் அணியின் சார்பில், வள்ளுவர் கோட்டத்தில் அறிவுத் திருவிழாவின் அங்கமாக நவம்பர் 8-ஆம் தேதி முதல் நடைபெற்று வரும் முற்போக்கு புத்தகக் காட்சி, தமிழ் அறிவுச் சூழலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பெரியாரிய - அம்பேத்கரிய - மார்க்சிய நூல்களை ஒரே இடத்தில் தேடி அலையாமல் வாங்க முடிவதும், இதை ஒரு கொண்டாட்டமாக முன்னெடுப்பதும், போற்றத்தக்க வரவேற்பு எனப் பலரும் பதிவிட்டு வருகின்றனர்.

இதுதொடர்பாக பதிவிட்டுள்ள எழுத்தாளர் சுந்தர சோழன், “சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்று வரும் முற்போக்கு புத்தகக் கண்காட்சிக்கு நண்பர்களுடன் போயிருந்தேன். இடதுசாரி முற்போக்கு நூல்கள் ஒருசேரக் கிடைக்கும் இடமாக இருக்கிறது.

வரலாறு, தொல்லியல் மொழி, அரசியல் என பல துறைகளைச் சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்கள் விற்பனைக்குக் கிடைக்கின்றன.

அந்த வகையில், இது மிகுந்த பயனுள்ளதாக இருக்கும் என்று நண்பர்கள் பேசிக் கொண்டோம். ஏனெனில், அங்கு 700க்கும் மேற்பட்ட அரங்குகள் இருந்தாலும், நாம் புத்தகங்கள் வாங்கும் முற்போக்கு அரங்குகள் குறைவே. இந்தக் கண்காட்சியில் ஓர் இலக்குடன் (Targeted) அவை உள்ளன என்பதால் பயனுள்ளது.

16.11.2025 வரை இந்தக் கண்காட்சி நடைபெறும். இந்த முற்போக்கு புத்தகக் கண்காட்சியை ஆண்டுதோறும் நடத்தினால், சிறப்பாக இருக்கும்” என எழுதியுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்





கார்த்திக் கே.செல்வராஜ்

### குழந்தைக்குப் பெயர் சூட்டி மகிழ்ந்த போது...

2011-ஆம் ஆண்டு , நமது கழகத் தலைவர் அவர்கள், கழக நிகழ்ச்சிகளுக்காக கோவைக்கு வருகை தந்தார். அப்போது, அவர் தங்கியிருந்த விடுதிக்கு குடும்பத்துடன் பார்க்கச் சென்று, எனது மகள் கிருபா சபரிநாதன் தம்பதியின் குழந்தைக்குப் பெயர் சூட்ட கேட்டுக் கொண்டோம். தலைவர், இலக்கியா என்ற பெயர் சூட்டி மகிழ்ந்த தருணம்.

**- கார்த்திக் கே.செல்வராஜ்,**
**ஆர்.எஸ்.புரம் பகுதி கழகச் செயலாளர்,**
**கோவை வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வரலாறு

### மாநாட்டு வசூலில் மீதித்தொகை!

1958-ஆம் ஆண்டு ஜூன் 7 மற்றும் 8 தேதிகளில் தென்னாற்காடு மாவட்ட தி.மு.க. மூன்றாவது மாநாடு விருதாச்சலத்தில் நடைபெற்றது. 6-ஆம் தேதி மாலையிலிருந்தே மக்கள் திரள் திரளாக நடையாகவும், பஸ், ரயில், மாட்டு வண்டிகள், சைக்கிள்கள் மூலமாகவும் விருத்தாசலம் நோக்கி வரத் தொடங்கினர். இரண்டு நாள் மாநாட்டிலும், மாநாட்டுக் கட்டண வசூலில் செலவு போக ரூ.17ஆயிரத்து 500 மிச்சப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131